# தமிழ்நாடெங்கும் முத்தமிழறிஞர் கலைஞர் 8 ஆம் ஆண்டு நினைவுநாள் அஞ்சலி!



கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில்,முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு நாள் அமைதிப் பேரணி 07.08.2026 அன்று காலை 8.00 மணிக்கு நடைபெற்றது.அமைதிப் பேரணியில் (தொ.மு.ச) சென்னை மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்கத்தின் சார்பில் கருப்புச் சிவப்புச் சீருடையில் ஆயிரக்கணக்கானோர் முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் எம்.எல்.ஏ முன்னிலையில் கலந்து கொண்டனர்.உடன் தொழிலாளர் அணிச் செயலாளர் பி.டி.சி. ஜி.செல்வராஜ்,தொழிலாளர் அணி துணைச் செயலாளர் பி.டி.சி. வெ.பாலு,மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்கப் பொதுச் செயலாளர் பெரம்பூர் த.ஆறுமுகம் ஆகியோர் உள்ளனர்.




முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8வது ஆண்டு நினைவு நாளையொட்டி, நாமக்கல்லில் நடைபெற்ற அமைதிப் பேரணி நாமக்கல் மோகனூர் சாலையில் உள்ள அண்ணா சிலையில் இருந்து தொடங்கி, அவைத் தலைவர் சி.மணிமாறன் தலைமையில், பரமத்தி சாலையில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சிலை வரை சென்றனர். இந்நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம், நாமக்கல் மாநகராட்சி மேயர் து.கலாநிதி, துணை மேயர் செ.பூபதி, நகர செயலாளர்கள் இராணா ஆர்.ஆனந்த்,, அ.சிவக்குமார், ஒன்றிய செயலாளர் வி.கே.பழனிவேல் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8வது ஆண்டு நினைவு நாள் புகழஞ்சலி நிகழ்ச்சி குன்னூரில் கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் பா.மு.முபாரக் தலைமையில் நடைபெற்றது, நிகழ்வில் ஏராளமான கழகத் தோழர்கள் கலந்துகொண்டனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு சேலம் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக வாழப்பாடியில் தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம் முன்பு உள்ள கலைஞர் திருஉருவச்சிலைக்கு கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் எம்.பி. தலைமையில் மலர் தூவி மரியாதை செலுத்தினர். இந்நிகழ்வில் மாவட்ட துணை செயலாளர்கள் சுரேஷ்குமார், சின்னதுரை , மாவட்ட அவைத் தலைவர் முரா.கருணாநிதி, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம், மலர்விழி ராஜா, சந்திரமோகன், குணசேகரன் மற்றும் ஒன்றிய , நகர, பேரூர் செயலாளர்கள் , சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




திமுக தலைவரும் முன்னாள் முதல்வருமான கலைஞர் அவர்களின் 8 ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி தஞ்சை மத்திய மாவட்ட மாநகர தி.மு.க சார்பில் கீழவாசல் காமராஜர் சிலையிலிருந்து முன்னாள் ஒன்றிய அமைச்சர் எஸ்.எஸ்.பழனிமாணிக்கம் தலைமையில் தி.மு.க வினர் ஊர்வலமாக வந்து பழைய பேருந்து நிலையம் அருகே உள்ள அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்நிகழ்வில் முன்னாள் எம்.எல்.ஏ டி.கே.ஜி.நீலமேகம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் து.செல்வம், மாவட்டக் கழக அவைத் தலைவர் சி.இறைவன், மாநில கழக நிர்வாகிகள் எஸ்.ஜித்து, மரு.அஞ்சுகம் பூபதி, மாவட்டக் கழக நிர்வாகிகள் எல்.ஜி.அண்ணா, கனகவள்ளி பாலாஜி உள்ளிட்ட கழக நிர்வாகிகள், பங்கேற்றனர்.




முத்தமிழ்றிஞர் கலைஞர் அவர்களின் 8ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு திருப்பூர் மத்திய மாவட்ட கழகத்தின் சார்பில் இரயில் நிலையம் முன்பு தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா ஆகியோரின் சிலை முன்பு அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள கலைஞரின் திருவுருவப்படத்திற்கு திருப்பூர் மத்திய மாவட்ட கழக செயலாளர், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் க.செல்வராஜ் தலைமையில், திருப்பூர் தெற்கு மாநகர கழக செயலாளர் டி.கே.டி. மு.நாகராசன் முன்னிலையில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். இதில் மாநில, மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், பகுதி, ஒன்றிய, வட்டக் கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 8வது நினைவு நாளை முன்னிட்டு நீலகிரி மாவட்ட தி.மு.க. சார்பில், மாவட்ட கழக அலுவலக முகப்பில் உள்ள தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாவட்ட துணை செயலாளர் ரவிகுமார் தலைமையில், மாவட்ட கழக அவை தலைவர் போஜன் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் மாவட்ட கழக பொருளாளர் நாசர் அலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் தம்பி இஸ்மாயில், உதகை நகர செயலாளர்கள் ஜார்ஜ், ரமேஷ் மற்றும் பலர் உள்ளனர்.




தமிழினத் தலைவர், முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8வது ஆண்டு நினைவஞ்சலி தினத்தை முன்னிட்டு, கரூர் அன்பு கரங்கள் இல்லத்தில், கரூர் மாவட்ட கழக செயலாளர், வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. வழிகாட்டுதலுடன்உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு தினத்தையொட்டி கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக மாவட்ட செயலாளர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் தலைமையில் கிருஷ்ணகிரி பெங்களூர் சாலையிலிருந்து அமைதிப் பேரணி சென்று கிருஷ்ணகிரி, ராயக்கோட்டை மேம்பாலம் அருகில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவருவு சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. இதனைத் தொடர்ந்து பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் மாநில அமைப்பு சாரா ஓட்டுனர் அணி செயலாளர் செங்குட்டுவன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வெற்றிசெல்வன் , மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், மாநில வர்த்தக அணி துணை செயலாளர்கள் சீனிவாசன் , அன்பரசன் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள், கழகத் தோழர்கள், மகளிர் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.